**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு, ஜூலை–2025**

**மறுகூட்டல் / மறுமதிப்பீடு முடிவுகள் வெளியிடுதல்**

**குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்று முடிந்த ஜூலை–2025, பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு எழுதி, மறுகூட்டல் (Re–total) மற்றும் மறுமதிப்பீடு (Revaluation) கோரி விண்ணப்பித்தவர்களுள், மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் Notification– பகுதியில் SSLC Examination தலைப்பில் **26.08.2025 (செவ்வாய் கிழமை) அன்று பிற்பகல்** வெளியிடப்படவுள்ளது. **இப்பட்டியலில் இடம் பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை** எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறுகூட்டல் / மறுமதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் மட்டும் 26.08.2025 பிற்பகல் முதல் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழை (Provisional Certificate) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஓம்/–**
**இயக்குநர்**

**நாள்: 25.08.2025**
**இடம்: சென்னை– 600 006.**